www.padippakam.com



# குடாநாட்டில் வேளாளக் குடியேற்றமும் அடிமை குடிமைகளின் வருகையும்...

18

# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

## வரலாற்றுத் தொடர்

சிங்கைநகர் அரசன் வரோதய சிங்கையாரியனுக்குப் பயந்து நாலாம் பராக்கிரமபாகு குருநாகலில் இருந்த தனது இராஜதானியை தம்பதெனியாவுக்கு மாற்றிய செய்தி 'குருநாகல் விஸ்தாய' என்ற அவன் காலத்தில் இயற்றப்பட்ட சிங்கள் நூலில் காணப்படுகின்றது.

கி.பி. 1310-ல் மேற்படி பராக்கிரமபாகுவின் இராஜசபையில் போஜராஜ பண்டிதன் என்ற தமிழ்ப் பிராமணப் புலவன் 'சரஜோதி மாலை' என்ற தமிழ் சோதிட நூலை அரங்கேற்றியதாக ஒரு வரலாற்றுக் குறிப்பு அவன் காலத்து சிங்கள வரலாற்று நூல்களில் காணப்படுகிறது. தமிழ் மன்னனான சிங்கைநகர் மன்னனுக்குப் பயந்து தனது இராஜதானியை மாற்றிய ஒரு சிங்கள மன்னனின் அரசசபையில் ஒரு தமிழ் நூல் அரங்கேற்றுப்பட்டதானது அக்கால மன்னர்களிடையே இருந்தது அரசு மற்றும் அதன் எல்லைகள் தொடர்பான பூசலேயன்றி மகாவம்சமும் ஏனைய சிங்கள வரலாற்று நூல்களும் கூறுவதைப் போல் - இன மொழி ரீதியான பூசல் கிடையாது என்பதற்கு சான்று பகிர்வதாக பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை கூறுகிறார்.

அக்காலத்து தமிழ் அரசர்கள் - பார்ப்பனிய ஆளுமையும், செல்வாக்கும் காரணமாக சமஸ்கிருத மொழியை பாதுகாப்பதிலும் சமஸ்கிருத நூல்களை தமது அரச சபையில் அரங்கேற்றுவதிலும் அக்கறைகாட்ட சிங்கள அரசர்கள் தமிழ் மொழியை ஆதரிப்பதிலும், தமிழ் இலக்கியங்களை தமது அரச சபைகளில அரங்கேற்றுவதிலும் அதிக அக்கறை காட்டியதாக முதலியார் இராஜநாயகம் குறிப்பிடுகிறார்.

இலங்கையில் நிலைமை இவ்வாறிருக்க தமிழ் நாட்டில் 40 வருடங்களாக மதுரையிலிருந்து அரசாண்ட் மாறவர்மன் முதலாம் குலசேகர பாண்டியன் தனது கடைசிக்காலத்தில் தனது பட்டத்துராணியினுடைய மகன் சுந்தரபாண்டியனுக்கு முடிசூடாமல் வைப்பாட்டி மகனான வீரபாண்டியனுக்கே முடி சூடி அவனை பாண்டிய மன்னனாக்கினான் இதனால் கடும் கோபம் கொண்ட சுந்தர பாண்டியன் தனக்குச் சார்பான படைவீரர்களையெல்லாம் ஒன்றுதிரட்டி வீரபாண்டியனை சிம்மாசனத்திலிருந்து இறக்கிவிட்டு, தனக்குத் துரோகம் செய்த தந்தையையும் கொன்றுவிட்டு ஆட்சி பீடமேறினான். ஆயினும் அவன் ஆட்சி நீண்டநாள் நீடிக்கவில்லை. வீர பாண்டியன் படை திரட்டி அவனை வென்று மதுரையிலிருந்து துரத்திவிட்டான்.

கி.பி. 1310-ல் மதுரையிலிருந்து துரத்தப்பட்ட சுந்தரபாண்டியன், அப்போது தெலுங்கு நாட்டில் நிலைகொண்டிருந்த முஸ்லீம் தளபதியான மாலிக்கபூரிடம் சரணடைந்து, அவனது படைகளோடு வந்து வீரபாண்டியனை விரட்டினான். ஆயினும், மாலிக்கபூரின் படைகள் திரும்பிச் சென்றதும், வீரபாண்டியன் மீண்டும் ஆட்சியைக் க்கைப்பற்றிவிட, இம்முறை சுந்தரபாண்டியன் சிங்கைநகர் அரசன் வரோதய சிங்கையாரியனிடம் வந்து தஞ்சமடைந்து அவன் உதவியைக் கோரினான். அவனும், தனது படைகளுடன் மதுரை சென்று வீரபாண்டியனை தோற்கடித்துவிட்டு சுந்தரபாண்டியனை மீண்டும் ஆட்சிக்கு வரச்செய்தான்.

இவ்வாறு வரோதய சிங்கையரின் பாண்டிய மன்னனுக்குச் செய்த உதவி பற்றி,

> **"கோமாறன் கரகமல மோடை**
> **பட்டங்குளமீது குவியக்கண்டு**
> **மாமாரி மதக்கலுழிக் கிளையானை**
> **செம்பொனுடன் வழங்குவேந்தன்"**

என்று செகராசசேகரமாலை சிறப்பாயிரத்தில் புகழ்ந்து கூறப்பட்டிருக்கிறது.

வரோதய சிங்கையாரியன் - பாண்டியனுக்கு உதவுவதற்காக மதுரைசென்ற காலத்தில், சோழர் ஆட்சியின்போது காலத்தில் இலங்கையில் வந்து குடியேறிய வன்னியர்கள் - அவனுக்கு எதிராக கிளர்ச்சி செய்து தனியரசொன்றை தாபிக்க முயன்றனர். இதையறிந்த வரோதயன், தனது படைகளுடன் சிங்கைநகருக்குத் திரும்பிவர, சேர அரசன் ஒருவன் மதுரைக்குப் படையெடுத்து வந்து சுந்தர பாண்டியனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிவிட்டான். ஆனால் அவனது ஆட்சியும் ஒழுங்கானதாக இல்லாமல் கலகங்களும் குழப்பங்களும் மிகுந்ததாக இருக்க, சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த மாலிகபூர் படையெடுத்து வந்து பாண்டிய நாட்டை மட்டுமல்ல சோழ நாட்டையும் கூடக்கைப் பற்றிவிட்டான்.

இவனது ஆட்சிக்காலத்தில் குடிகள் மீது அளவுக்கதிகமான வரிச்சுமை சுமத்தப்பட்டதாலும், வாள்முனையில் கட்டாய மதமாற்றம் - பெண்களைக் கவர்ந்து செல்லல் முதலான சொல்ல முடியாத பல அக்கிரமச் செயல்கள் நடந்ததாலும், அதற்கு அஞ்சிய நிலப் பிரபுக்களான பல வெள்ளாளத் தலைவர்கள் - தங்களது குடியானவர்களுடன் - தமிழ் நாட்டை விட்டு வெளியேறி யாழ். குடாநாட்டில் வந்து குடியேறியதாக முதலியார் இராஜநாயகம் சொல்கிறார். தமிழ்நாட்டிலிருந்து வெளியேறியவர்களை பாண்டி மழவன் என்பவன் ஒன்று சேர்த்து குடாநாட்டுக்கு அழைத்து வந்ததாக 'யாழ் வைபவமாலை' சொல்கிறது.

இந்தக் குடியேற்றம் தொடர்பாக குடாநாட்டு வரலாற்றை ஆய்வுசெய்த தமிழ் வரலாற்று அறிஞர்களிடையே முரண்பட்ட கருத்துக்கள் உள்ளன.

**யாழ்ப்பாண வரலாற்றை ஆய்வுசெய்த வ. குமாரசுவாமிப்பிள்ளை - யாழ்ப்பாணத்தில் வந்து குடியேறிய வேளாளத் தலைவர்கள் மாலிக்கபூரின் படையெடுப்புக்கு அஞ்சி அகதிகளாக வரவில்லை. அரச நிர்வாகத்தில் உயர் பதவிகளை நிர்வகிப்பதற்காக விசேட அழைப்பின் பேரில் தமிழ் நாட்டில் இருந்து 13 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் அழைத்து வரப்பட்டவர் என்று தனது 'தண்டிகைக் கனகராயன் பள்ளு' என்ற நூலின் அனுபந்தத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.**

'யாழ் வைபவமாலை'யை எழுதிய மயில்வாகனப் புலவரோ வரோதயனுக்கு முந்திய கூழங்கைச் சக்கரவர்த்தியின் காலத்திலேயே - அவன் கேட்டுக்கொண்டதன் பெயரில் பாண்டி மழவன் இந்தக் குடிகளை தமிழ் நாட்டிலிருந்து அழைத்து வந்து குடாநாட்டில் குடியேற்றியதாகச் சொல்கிறார்.

'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்னும் நூல் எழுதிய முதலியார் இராஜநாயகமோ, 14ம் நூற்றாண்டில் மாலிக்கபூரின் அக்கிரமங்களால் அங்கிருந்து வெளியேறிவர்களே - பாண்டி மழவன் என்பவனது தலைமையில் வந்து குடாநாட்டில் குடியேறியவர்கள் என்று செர்ல்கிறார்.

யாழ்ப்பாண வரலாற்றை ஆய்வுசெய்த வ. குமாரசுவாமிப்பிள்ளை - யாழ்ப்பாணத்தில் வந்து குடியேறிய வேளாளத் தலைவ்ர்கள் மாலிக்கபூரின் படையெடுப்புக்கு அஞ்சி அகதிகளாக வரவில்லை. அரச நிர்வாகத்தில் உயர் பதவிகளை நிர்வகிப்பதற்காக விசேட அழைப்பின் பேரில் தமிழ் நாட்டில் இருந்து 13 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் அழைத்து வரப்பட்டவர் என்று தனது 'தண்டிகைக் கனகராயன் பள்ளு' என்ற நூலின் அனுபந்தத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இருபாலை, மண்ணாடு (எந்த இடம் என்று தெரியவில்லை) ஆகிய இடங்களுக்குச் சொந்தக்காரரான முதலி, முடிசூட்டும் உரிமை உடையவர்களில் முதல்வராகவும், தெல்லிப்பளை கனக்ராயன் செட்டி துலாபாராதனக் கிரியைக்கு அதிபராகவும், மயிலிட்டி நரசிங்கதேவன் அரசிறை வருமானங்களை பொக்கிசத்தில் சேர்க்கும் வரிநிலைக்கள அதிபராகவும் விசேட அழைப்பின் பேரில், தமிழ்நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள்" என்பது குமாரசாமிப்பிள்ளையின் வாதம்.

ஆனால், மயில்வாகனப் புலவரோ, "சிங்கையாரிய மகராசன், தமிழ் குடிமக்களை தன்னுடைய நாட்டுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென தமிழ்நாட்டரசர்களுக்கு மடல் அனுப்ப, அதற்கு இசைந்த அவர்கள் சில குடிகளை அனுப்பிவைத்தார்கள். அவ்வாறு ஐந்து குடிமைகளுடன் (நாவிதர், வண்ணார், பறையர், புலையர், பள்ளர் முதலான குடியானவர்கள்) வந்த பொன்பற்றியூர் வேளாளன் பாண்டி மழவனும் அவன் தம்பியும், அவர்களது மைத்துனர்களாகிய சண்பக மழவனும் அவன் தம்பியும், திருநெல்வேலியிலும் காவிரியூரைச் சேர்ந்த நரசிங்கதேவன் மயிலிட்டியிலும் வாவிநகர் வேளாளன் செண்பக மாப்பாணனும், சந்திர சேகரமாப்பாணனும், கனகராயன் என்னும் செட்டியும் தெல்லிப்பளையிலும், கோவலூர் வேளாளன் பேராயிரமுடையான் இணுவிலிலும், இராசமுத்திரைகளும் பல வரிசைகளும் (பட்டங்கள், பெற்ற கச்சூர் வேளாளன் நீலகண்டனும் அவன் தம்பிமார் நாலுபேரும் பச்சிலைப் பள்ளியிலும், சிகரமாநகர வேளாளன் கனக மழவனும் அவன் தம்பிமார் நால்வரும் புலோலியிலும், கூபக நாட்டு வேளாளர் கூபகார்யேந்திரனும் புண்ணிய பூபாலனும் தொல்புரத்திலும், புல்லூர் வேளாளன் தேவராயேந்திரன் கோயிலாக் கண்டியிலும், ஏரெழுபது என்னும் பிரபந்தம் பாடப்பெற்ற உயர்குல வேளாளனும் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவனுமான மண்ணாடு கொண்ட முதலி இருபாலையிலும், செய்யூர் வேளாளன் இருமரபுந்துய்ய தனிநாயகன் நெடுந்தீவிலும் காஞ்சிபுரத்தில் இருந்து வந்த பல்லவன் எனும் பிரபுவும் அவனோடு வந்த இரண்டு துணைப்பிரபுக்களும் வெளிநாடென்று சொல்லப்பட்ட பல்லவராயன் கட்டிலும், சிங்கையாரிய மன்னனால் குடியேற்றப் பட்டதாக" வைபவ மாலையில் குறிப்பிடுகின்றார்.

ஆனால் முதலியார் ராஜநாயகமோ மயில்வாகனப்புலவரின் கருத்தையும், குமாரசாமிப்பிள்ளையின் கருத்தையும் அதாவது வேளாளர்கள் குடாநாட்டிற்கு வந்த நோக்கத்திற்கு அவர்கள் இருவரும் சொன்ன காரணத்தையும் வந்ததாகச் சொல்லப்படும் கால நிர்ணயத்தையும் நிராகரித்து அவர்கள் மாலிக் கபூரின் படையெடுப்பின்போதும் தெலுங்கு நாயக்கர்களின் படையெடுப்பின் போதும் அதாவது 14 ஆம் நூற்றாண்டிலேயே குடாநாட்டிற்கு வந்ததாக நிறுவியிருக்கின்றார்.

"பாண்டி மழவன் இந்தியாவிற்குப்போய் உயர்குடி வேளாள மக்களை பற்பல இடங்களில் இருந்து கொணர்ந்தான் என்றும் கூழங்கையன் ஓலை போக்கி அவர்களை அழைப்பித்தான் என்றும் முன்னூல் ஆசிரியர்கள் (வைபவமாலை முதலான நூல்கள்) கூறியிருக்கின்றார்கள். அவர்கள் சொல்வது போல் அடிமை குடிமைகளாலும் செல்வத்தாலும் மேம்பட்ட இந்த வேளாள மக்கள் பொன் கொழிக்கும் ஆற்று வளம் நிரம்பிய தங்களது தேசங்களை விட்டு வேளாண் மக்களுக்குரிய வளமற்ற இந்நாட்டிற்கு (குடாநாட்டிற்கு) வருவதற்கேற்ற இன்றியமையாத காரணம் தான் என்ன? பஞ்சமா? அல்லது அந்நாட்டிலும் இந்நாடு கவரும் தரத்ததா? இந்நாளிலும் தமிழர்கள் மலாய் (மலேசியா) பர்மா, முதலிய தூரதேசங்களுக்கு போய் பணமீட்டி குபேர செல்வம் பெற்றிருந்தாலும் தங்கள் தங்கள் ஜனன பூமியை (தாயகத்தை) கைவிட்டார் மிகச் சிலரே. மாலிக் கபூர் எனும் முஸ்லீம் படையெடுத்து வந்து தென்னிந்தியாவைக் கைப்பற்றிய பின் அவனுடன் வந்த முஸ்லீம் பிரதானிகள் அங்குள்ள உயர் குடி வேளாண் மங்கையரை தீண்டத் தொடங்கியதை அறிந்தும், கப்பண்ணன் விஷ்வநாதன் முதலான விஜய நகர அரசர்கள் மதுரையை அரசாண்ட காலத்தில் தமிழ் அதிகாரிகளை நீக்கி பாளையக்காரர்களை (தெலுங்கர்களை) அந்த இடத்துக்கு நியமித்தபோதும் பெண்கள் மான பங்கத்திற்குப் பயந்தும் தங்கள்

(தொடர்ச்சி 18-ம் பக்கம்)

**ஆட்சிக்காலத்தில் குடிகள் மீது அளவுக்கதிகமான வரிச்சுமை சுமத்தப்பட்டதாலும், வாள்முனையில் கட்டாய மதமாற்றம் - பெண்களைக் கவர்ந்து செல்லல் முதலான சொல்ல முடியாத பல அக்கிரமச் செயல்கள் நடந்ததாலும், அதற்கு அஞ்சிய நிலப் பிரபுக்களான பல வெள்ளாளத் தலைவர்கள் - தங்களது குடியானவர்களுடன் - தமிழ்நாட்டை விட்டு வெளியேறி யாழ். குடாநாட்டில் வந்து குடியேறியதாக முதலியார் இராஜநாயகம் சொல்கிறார்.**

- நக்கீரன்

படிப்பகம்